# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

*பிரிவு* : TNPSC Group I *தேர்வு*

*பாடம்* : *இந்திய பொருளாதாரம்*

*பகுதி* : **அன்னிய மூலதனம், உலக வர்த்தக அமைப்பு, உலகமயமாதல் மற்றும் தனியார் மயமாதல்**

**காப்புரிமை**

*தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.*

*எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.*

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# அன்னிய மூலதனம்

## அன்னிய மூலதனம்

- வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக மூலதனப் பற்றாக் குறை இருக்கின்றது. போதுமான மூலதனம் இல்லாமல், வறுமையின் நச்சுவட்டத்தை உடைத்துக் கொண்டு, விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற முடியாது.
- மூலதனத்தைப்பெற, ஒன்று, உள்நாட்டு மூலதனத்தைப் பெருக்க வேண்டும். அல்லது, மற்றொன்று பற்றாக்குறையை ஈடுபட்ட அன்னிய மூலதனத்தைப் பெற வேண்டும். அன்னிய மூலதனத்தின் தேவையையும், அதிலுள்ள வரையறை களையும் அறிந்து கொள்வது இந்தியப் பொருளாதார வளர்ச்சியைப் புரிந்து கொள்ளத் துணை செய்யும்.

## I. அன்னிய மூலதன தேவை

இந்தியா போன்ற வளர்கின்ற நாடுகளின் அன்னிய மூலதனத் தேவையைச் சுட்டிக் காட்டலாம்.

**I. இறக்குமதி தேவை:**

விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற எந்திரங்களையும், கருவிகளையும், மூலப்பொருட்களையும் தொழில் நுட்ப அறிவையும் வெளிநாடுகளிலிருந்து பெற வேண்டியுள்ளது. இவற்றைப் பெற ஏற்றுமதி மூலம் போதுமான அன்னியச் செலாவணியை ஈட்ட முடியாத நிலையில், அன்னிய முதலீட்டைப் பெறுதல் தேவையாகின்றது. அன்னிய முதலீடு, அன்னியச் செலாவணியாக வருவதால் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டியவற்றை இறக்குமதி செய்து கொள்ள முடிகின்றது.

**2. உள்நாட்டு மூலதனப் பற்றாக்குறை:**

வளரும் நாடுகளின் மூலதன ஆக்கம் குறைவாக உள்ளது. மக்களின் வருவாயும் சேமிப்பும் குறைவாக இருப்பதால் மூலதன ஆக்கமும் குறைவாக உள்ளது. பற்றாக் குறையாக இருக்கும் மூலதனத்தை ஈடுகட்ட ஏற்ற முறையாக அன்னிய மூலதனம் இருக்கின்றது.

**3. சேர்ந்து கிடைப்பவை:**

அன்னிய மூலதனம் வருகின்ற பொழுது, அதனோடு இணைந்து பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தொழில் நுட்பம், வாணிபத் திறமை, அனுபவம் ஆகியவை வருகின்றன. இவற்றை தனியே பெற முடியாது.

**4. சேமிப்பைக் கூட்ட:**

மக்களின் வருவாயைக் கூட்டாமல் சேமிப்பையும் மூலதனத்தையும் பெருக்க

முடியாது. முதலீட்டைக் கூட்டினால் தான் மக்களின் வருவாய் உயரும். மூலதன ஆக்கம் ஏற்படும். இதற்குத் தொடக்ககால முதலீடாக அன்னிய முதலீடு கைகொடுக்கின்றது.

**5. தொழில்களை வளர்க்க:**

நாட்டில் திட்டங்கள் தீட்டி தொழில்களை வளர்க்க மூலதனம் தேவை. தொடக்க காலத்தில் உள்நாட்டு மூலதனம் இதற்குப் போதுமானதாக இருக்காது. இந்த நிலையில் வெளிநாட்டு மூலதனம் தொழில் வளர்ச்சிக்குத் துணை செய்கின்றது.

**6. மூலவளங்களைப் பயன்படுத்த:**

நாட்டிலிருக்கும் மூலவளங்களைப் பயன்படுத்த மூலதனம் தேவை. இந்த மூலதனத்தை அன்னிய மூலதனமாகப் பெறுகின்ற பொழுது, மூலவளங்களைச் சரியாகப் பயன்படுத்த முடிகின்றது.

**7. அகக்கட்டுமானங்களை உருவாக்க:**

வளர்ச்சி குறைந்த நாடுகளில் இரயில்கள். மின்சாரம், சாலைப் போக்குலரத்து போன்ற அகக் கட்டுமானங்கள் போதுமான அளவில் இல்லை. அவற்றை உருவாக்க மூலதனம் தேவை, அன்னிய மூலதனம் அகக்கட்டுமானங்களை உருவாக்கத்துணை செய்கின்றது.

## II. அன்னிய மூலதனத்தின் வகைகள்

**வகைகள்:**

நமது நாட்டிற்குக் கிடைக்கின்ற அன்னிய முதலீட்டைக் கீழ்க்கண்ட வகைகளில் பிரிக்கலாம்.

**I. நேரடி முதலீடு (Direct Investment):**

வெளிநாட்டிலிருந்து நேரடியாக தொழில், வாணிபத்தில் நமது நாட்டில் முதலீடு செய்யலாம். வளர்ச்சி பெற்ற நாடுகளில் இதற்காகவே நிறுவனங்களை அமைத்து, அவை இங்கு கிளைகள் அல்லது துணை நிறுவனங்களின் மூலம் முதலீடு செய்கின்றன. சில வேளைகளில் வெளிநாட்டினர் நேரடியாக இங்குள்ள நிறுவனங்களின் பங்குகள. கடன் பத்திரங்களில் முதலீடு செய்யலாம்.

**2. அன்னியர் இணைந்த முதலீடுகள் (Foreign Collaborations):**

சமீப காலத்தில் வெளிநாட்டு முதலும் இந்திய முதலும் இணைந்து தொழில் முறையில் ஈடுபடும் போக்கு காணப்படுகின்றது. இத்தகைய முதலீட்டை இந்திய அரசு ஊக்குவிக்கின்றது. இப்படிப்பட்ட இணைந்த முதலீடுகள் (i) வெளிநாட்டு தனியாரும் இந்தியத்தனியாரும்இணைந்து முதலீடுகள் செய்வதாகவோ (ii) வெளிநாட்டு நிறுவனங்களும் இந்திய அரசும் இணைந்து நடத்துவதாகவோ (iii) வெளிநாட்டு அரசும் இந்திய அரசும் இணைந்து செயல்படுவதாகவோ மூன்று துறைகளில் அமையும்.

**3. அரசுகளுக்கிடையில் கடன்கள் (Inter-Government Loans):**

வளர்ச்சிபெற்ற நாடுகளின் அரசுகள் வளர்கின்ற நாடுகளின் அரசுகளுக்குக் கடன்களாகவும், மானியங்களாகவும் நிதி உதவி செய்கின்றன. இந்திய அரசும் இப்படிப்பட்ட கடன்களும் மானியங்களும் பெற்று நமது நாட்டில் முதலீடு செய்து வருகின்றது.

**4. பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து கடன்:**

உலக வங்கி, பன்னாட்டுப் பணநிதி, ஆகிய வளர்ச்சி வங்கி போன்ற நிதி நிறுவனங்களிலிருந்து நிதி உதவி பெற்று முதலீடு செய்கின்றோம்.

**5. வெளிநாட்டு வாணிபக் கடன்கள் (External Commercial Borrowing):**

வெளிநாடுகளிலுள்ள வங்கிகள், கடன் நிறுவனங்களிலிருந்தும் கடன்பெற்று முதலீடு செய்கின்றோம். எடுத்துக்காட்டாக, அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி வங்கி, ஜப்பான் ஏற்றுமதி இறக்குமதி வங்கி, ஆகியவற்றிடமிருந்து பெற்ற கடன்களைக் கூறலாம்.

## நன்மைகள்:

**I. முதலீட்டளவைக் கூட்ட:**

அன்னிய உதவியின் மூலமாக நமது நாட்டின் முதலீட்டளவு கூடியுள்ளது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் தொடக்கத்தில் நாட்டு வருவாயில் 5 சதவிகிதம்தான் முதலீடு செய்தோம். இப்பொழுது நாட்டு வருவாயில் நமது முதலீட்டளவு 25 சதவிகிதம். அன்னிய உதவியின் மூலமாகத்தான் நமது முதலீட்டைக் கூட்ட முடிந்திருக்கின்றது.

**2. அன்னியச் செலவாணிச் சிக்கலைத் தீர்க்க:**

1972-73 முதல் அன்னிய செலாவணிச் சிக்கலுக்கு நமது நாடு ஆட்பட்டிருக்கின்றது. இச்சிக்கலை பெருமளவில் சமாளிக்க அன்னிய முதலீடாக வந்த அன்னியச் செலாவணிதான் கைகொடுத்திருக்கின்றது.

**3. தொழில் நுட்பத்தைப் பெருக்க:**

அன்னிய முதலீட்டோடு சேர்ந்து வெளிநாடுகளிலிருந்து தொழில் நுட்ப வல்லுநர்கள் வந்துள்ளனர். இந்தியர்களுக்கு உயரிய தொழில் நுட்பத்தில் பயிற்சி கிடைத்திருக்கின்றது. தொழில் நுட்ப ஆய்வும் பயிற்சியும் வளர்ந்திருக்கின்றன. இவற்றால் நமது நாட்டில் தொழில் நுட்பம் மேம்பட்டிருக்கின்றது.

**4. உணவுப் பொருட்களின் விலையை நிலைப்படுத்த:**

அன்னிய உதவி குறிப்பிடத்தக்க அளவு பொருட்களாகக் கிடைத்திருக்கின்றது. மேலும் அன்னிய உதவியைக் கொண்டு தேவையான உணவுப் பொருட்களைப் பெற்றிருக்கின்றோம். இதனால் உணவுப் பொருட்களின் விலையை நிலைப்படுத்த முடிந்திருக்கின்றது.

**5. உற்பத்தி பெருக:**

அன்னிய உதவியைக் கொண்டு மூலப் பொருட்களை இறக்குமதி செய்திருக்கின்றோம். இதனால் நமது நாட்டின் மொத்த உற்பத்தி கூடியிருக்கின்றது.

## குறைகள்:

**I. அரசியல் நெருக்கடி:**

வெளிநாட்டு உதவியை நாம் சார்ந்திருக்கின்ற பொழுது, அந்த நாட்டின் அரசியல் தலையீட்டிற்கு நாம் ஆட்பட வேண்டியதிருக்கின்றது. (எ.கா) நாம் பெருமளவில் உதவி பெறும் அமெரிக்கா நம்மிடம் நெருக்கடியை ஏற்படுத்தி, நம்மைச் சிலவற்றைக் கட்டாயமாகச் செய்ய வைக்கும் 1971இல் இந்தியா, பாகிஸ்தான் மோதல் ஏற்பட்ட பொழுது அமெரிக்கா உதவியை நிறுத்துவதாகக் கூறி அச்சுறுத்தியதையும், 1994இல் டங்கல் திட்டத்தை ஏற்கச் செய்வதையும் கூறலாம்.

**2. நிகர ஆதாயம் குறைவு:**

அன்னிய முதலீடிற்கும், கடனுக்கும், உதவிக்கும் நாம் ஆண்டுதோறும் அன்னியச் செலாவணியில் கொடுக்கும் வட்டி, பங்குத் தொகை, திரும்பச் செலுத்தும் கடன்

ஆகியவற்றை எல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அன்னிய உதவியிலிருந்து, நமக்குக் கிடைக்கும் ஆதாயம் மிகவும் குறைவாகவே இருக்கும்.

**3. உறுதிப்பாடின்மை:**

அன்னிய உதவி கிடைக்கும் அளவு, கிடைக்கும் காலம் ஆகியவை திட்டவட்டமாகத் தெரிவதில்லை. ஆதலால் அன்னிய உதவியைத் திட்டமிட்டுப் பயன்படுத்தவில்லை. அன்னிய உதவியில் எதிர்பார்க்கும் பயன் கிடைக்காமல் போனதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

# உலக வர்த்தக அமைப்பு
## (WORLD TRADE ORGANISATION - WTO)

- "காட்" சமரசப் பேச்சுவார்த்தைகள் ஏழு சுற்றுகள் நடைபெற்று "உருகுவே சுற்று" என்று அழைக்கப்படும் எட்டாவது சுற்று பேச்சு வார்த்தைகள் 1989 ல் தொடங்கி 1995 ஆம் ஆண்டு "உலக வர்த்தக அமைப்பு" (WTO) உருவாக்கப்பட்டது. WTO வின் "தலைமை இயக்குனராக" பாஸ்கல் லாமி (Pascal Lamy) என்பவர் இப்பதவியை வகித்து வந்தார்.
- WTO வின் முக்கிய நோக்கம் பேதமற்ற, சுதந்திரமான வர்த்தகமே ஆகும். அதாவது ஒரு வர்த்தகத் தடைகளே (சுங்க வரிகள் மற்றும் சுங்கவரியில்லாதவை) இங்கு காண இயலும். இது மேலும் குறைந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு, போட்டியுடன் கூடிய வர்த்தக அமைப்பு நிலையை உருவாக்கி, அவைகள் சரிசெய்யக் கூடிய அளவுக்கு நேரம் ஒதுக்கி நெகிழ்ச்சியுள்ள வர்த்தகத்துடன் கூடிய சலுகைகளைத் தந்துள்ளது.
- WTO வின் முக்கிய பணிகளாவன

1. உறுப்பு நாடுகளின் வர்த்தக உடன்பாடுகளை நிர்வாகித்தல்.
2. வர்த்தக சமரசப் பேச்சுக்கு ஒரு அமைப்பு.
3. வர்த்தக தகராறுகளை கையாளுதல்.
4. தேச அளவிலான வர்த்தக கொள்கைகளை கண்காணித்தல் வளர்ந்து வரும் நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவியும் பயிற்சியும் கொடுத்து உதவுதல்.
5. இதர சர்வதேச அமைப்புகளோடு கூட்டுறவுடன் செயல்படுதல்.

- WTO வின் அனைத்து உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் அளவிலான மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட்டப்பட்டு, இம்மாநாட்டில் பல்வேறு வர்த்தக உடன்பாட்டு முடிவுகள் எட்டப்படும்.

WTO மாநாடுகள்

| | | |
|---|---|---|
| 1. | 1996 | சிங்கப்பூர் |
| 2. | 1998 | ஜெனிவா, சுவிட்சர்லாந்து |
| 3. | 1999 | ஸ்கேட்டில் அமெரிக்கா |
| 4. | 2001 | தோகா, கர்த்தர் |
| 5. | 2003 | கான்கன், மெக்ஸிகோ |
| 6. | 2005 | ஹாங்காங் |
| 7. | 2009 | ஜெனிவா, சுவிட்சர்லாந்து |
| 8. | 2011 | ஜெனிவா, சுவிட்சர்லாந்து |
| 9. | 2013 | பாலி, இந்தோனேஷியா |
| 10. | 2015 | நைரோபி, கென்யா |
| 11. | 2017 | புவனோசியர்ஸ், அர்ஜென்டினா |

# உலகமயமாதல் மற்றும் தனியார் மயமாதல்

- LPG - தாராளமயமாதல், தனியார்மயமாதல், உலகமயமாதல்
- 1991- ஜுலையில் புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகம்
- பிரதமர் - நரசிம்மராவ்
- நிதியமைச்சர் - மன்மோகன்சிங்

**உலகமயமாதல்**

- இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்தில் ஒன்றிணைத்தல்
- 1991-ல் அறிமுகம்

**தாரளமயமாதல்**

- பொருளாதாரக் கட்டுப்பாடுகளை தளர்த்துதல்
- பல புதிய துறைகளில் தொழில் தொடங்க தனியாருக்கு அனுமதி அளித்து தொழில்துறையை வளர்த்தல்

**தனியார்மயமாதல்**

- பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியார் துறைக்கு விற்பதன் மூலம் உற்பத்தியை அதிகரித்தல்.

**நன்மைகள்**

1. வேலைவாய்ப்பு பெருக்கம்
2. தொழில்முனைவோர் அதிகரிப்பு
3. போட்டிமனப்பான்மை
4. இந்திய பொருட்களின் தரம் அதிகரிப்பு
5. வருவாய் பெருக்கம்
6. உள்கட்டமைப்பு வளர்ச்சி

7. மூலதன பெருக்கம்
8. தொழில்முனைவொர்க்கு அதிக லாபம்
9. வாழ்க்கைத்தரம் உயர்வு
10. தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி

**தொழிற்துறை வளர்ச்சி**

▶ LPG - க்கு பின்னர் தொழிற்துறையில் ஒருங்கிணைந்த மற்றும் மறுசீரமைவு வேகம் பெற்றது.

1. கையகப்படுத்துதல், இணைப்பு மற்றும் விரிவாக்கம்
2. அந்நிய கூட்டு
3. FDI அனுமதி
4. எஃகு, சிமெண்ட், வாகனம் போன்ற துறைகளில் தொழில்நுட்ப மேம்பாடு
5. இந்தியர்களுக்கு தொழிற்பயிற்சி, அது தொடர்பான ஆய்வுகள் மேம்பட்டது.

**உடனடி வளர்ச்சி**

▶ LPG - அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் 2.1% ஆக இருந்த தொழில் வளர்ச்சி 1996ல் 88% ஆனது. 1999ல் 8.1% ஆக இருந்தது.

**ஐந்தாண்டு திட்ட தொழிற் வளர்ச்சி**

▶ LPG - யின் தாக்கம் பின்னர் வந்த ஐந்தாண்டு திட்டங்களுக்கு எதிரொளித்தது.

- 8 - வது - 7.6%
- 9 - வது - 6.0%
- 10 - வது - 8.6%
- 11 - வது - 8.6%

**தகவல் தொழில் நுட்பத்துறை**

- இந்தியா தகவல் தொழில் நுட்பத் துறையின் குவாமையமாக மாறியது.
- டிசிஎஸ், விப்ரோ, இன்போசிஸ் போன்ற ஏராளமான உலகில் புகழ்பெற்ற நிறுவனங்கள் தோன்றின.

## SEZ - 2005

- தொழிலாளர் நலச் சட்டங்களிலிருந்து விலக்கு மற்றும் பல சலுகைகளுடன் தொடக்கம்.
- இதனால் பல தொழிற்சாலைகள் அமையப்பெற்று தொழிற்துறை வளர்ச்சி பெற்றது.